# மாகாண கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)
## மாதிரிப் பரீட்சை - 2017

| தரம் : 13 (2017) | புள்ளித்திட்டம் | கிறிஸ்தவம் |
|---|---|---|

### பகுதி - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 1 | 21) | 5 | 31) | 3 | 41) | 5 |
| 2) | 2 | 12) | 2 | 22) | 4 | 32) | 1 | 42) | 1 |
| 3) | 4 | 13) | 3 | 23) | 3 | 33) | 5 | 43) | 2 |
| 4) | 5 | 14) | 4 | 24) | 2 | 34) | 2 | 44) | 4 |
| 5) | 1 | 15) | 5 | 25) | 1 | 35) | 4 | 45) | 3 |
| 6) | 3 | 16) | 4 | 26) | 3 | 36) | 1 | 46) | 2 |
| 7) | 4 | 17) | 1 | 27) | 5 | 37) | 2 | 47) | 4 |
| 8) | 5 | 18) | 2 | 28) | 4 | 38) | 3 | 48) | 3 |
| 9) | 2 | 19) | 5 | 29) | 1 | 39) | 4 | 49) | 1 |
| 10) | 1 | 20) | 3 | 30) | 2 | 40) | 5 | 50) | 5 |

### பகுதி - I

**1)** 1) (i) ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு முறிவடைதல்
(ii) மனிதனுக்கும் பூமிக்கும் இடையிலான உறவு முறிவடைதல்
(iii) இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு முறிவடைதல்
(iv) மனிதனுக்கும் மனச்சான்றுக்கும் இடையிலான உறவு முறிவடைதல்

2) (i) தாவீதின் மகன்
(ii) யூதரின் அரசன்
(iii) இறைமகன்
(iv) மனுமகன்

3) (i) முற்பாவம்
(ii) காயீன் ஆபேல்
(iii) வெள்ளப்பெருக்கு
(iv) பாபேல் கோபுரம்

4) (i) சோதிடம், குறிசொல்லுதல் என்பவற்றைத் தவிர்த்தல்
(ii) சாபங்கள் நிறைவேற்றப்படல்
(iii) நேர்மையும் துணிவும் உடையவர்கள்
(iv) இறைவாக்குகள் யாவும் உடன்படிக்கையோடும், பத்துக் கட்டளைகளுடனும் தொடர்புடையவை

5) (i) பபிலோனிய அரசு
(ii) பாரசீக அரசு
(iii) கிரேக்க பேரரசு
(iv) உரோமைய பேரரசு

2) 1) (i) யேசுசபை
(ii) வின்சென்சபை
(iii) கார்மேல்சபை
(iv) கப்புச்சின்சபை

2) (i) இறைவார்த்தைக்கு முதலிடம் அளிக்கப்பட்டமை
(ii) இறைவன் எல்லாவற்றையும் விட உன்னத நிலையில் உள்ளார்
(iii) மனிதர் இறைவனின் குரலுக்கு பயந்திருந்தனர்
(iv) இறைவனுடைய முகம், கால்கள் என்பன அவருடைய வல்லமை, சக்தி என்பவற்றைப் பற்றி எடுத்துக்காட்டுகின்றன
(v) திருக்கோயிலில் மட்டும் இறைவழிபாடுகள் நடத்தப்பட்டன

3) (i) இலண்டன் மறைத்தூதுக் குழுவினர்
(ii) பப்டிஸ்ட் மறைத்தூதுக் குழுவினர்
(iii) வெஸ்லியன் மறைத்தூதுக் குழுவினர்
(iv) அமெரிக்க மறைத்தூதுக் குழுவினர்
(v) சபை மறைத்தூதுச் சங்கம் (CMS)
(vi) இரட்சணிய சேனையின் மறைத்தூதுக் குழுவினர்

4) (i) இளவரசன் தர்மபாலன்
(ii) ஜெயவீர பண்டார
(iii) கரலியட்ட பண்டார
(iv) வீரசுந்தர பண்டார
(v) தொனா கத்தரினா
(vi) யாழ்ப்பாண அரச குடும்பத்தின் இளவரச, இளவரசிகள்
(vii) தொன்சுவான்யமசிங்க

5) (i) சித்திரங்கள் அழகானவையாகவும், ஒளியுள்ளவையாகவும் இருப்பதைக் காணலாம்
(ii) கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டிருப்பதால் சித்திர உருவங்கள் முரடானவை
(iii) அணிந்துள்ள ஆடைகளில் சுருக்கங்கள் இல்லை
(iv) இவற்றில் பக்தியும் ஆன்மீகத் தன்மையும் விளக்கப்படுவதை வெளிப்படுத்துகின்றன
(v) ஆளின் முழுமையான தன்மையைக் காண முடியாது

3) 1) (i) படைவீரர்

(ii) அவருடன் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வன்

(iii) அவ்வழியே சென்றவர்கள்

(iv) தலைமைக் குருக்களும் பரிசேயரும்

2) (i) தேவ வேத புராணம்

(ii) சுவிசேச விசர்ஜயை ஞானாஞ்ஜயை, சுக்குர்ன தர்சனய, அஞ்ஞான ஞானசதய வேதகாவிய, பசான் புத்தகம், மங்கள கீதம், ஆனந்தக்களிப்பு, வியாகுல பிரசங்கம்

3) (i) பரிபூரண பலனை பிரச்சாரப்போதகம் செய்யும் முறை நீக்குதல்

(ii) மரியன்னை, புனிதர் வணக்கம் தகுந்த முறையில் ஊக்குவித்தல்

(iii) குருத்துவப் பயிற்சிக்காக குருமடங்களை ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவுதல்

(iv) வாரத்தில் ஒரு தடவையாவது கத்தோலிக்கர் நற்கருணையைப் பெற்றுக்கொள்ளல்

(v) அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக பாவமன்னிப்பு பெறுதல்

(vi) நற்கருணை ஆராதனையையும், நற்கருணை ஆசீரையும் ஊக்குவித்தல்

4) (i) கோயில் பற்றுப் பாடசாலைகள்

(ii) செமினரிகள்

(iii) ஒல்லாந்த பாடசாலைகள்

(iv) அனாதை இல்லங்கள்

5) (i) அடிமை கொண்ட நாடுகளுக்கு மறைத்தூதுவர்களை அனுப்புதல்

(ii) அவர்களைப் பாதுகாத்தல்

(iii) பண உதவி வழங்குதல்

(iv) தேவாலயங்களையும் துறவற மடங்களையும் கட்டுதல்

(v) அவற்றைப் பேணுதல்

(vi) அப்பிரதேசங்களுக்கு ஆயர்களை நியமித்தல்

## பகுதி - II

4) (i) **ஆபிரகாம் எதிர்கொண்ட சவால்கள்**

- தன்நாட்டிலிருந்தும் தன் இனத்தவரிடமிருந்தும் தன் தந்தையின் வீட்டிலிருந்தும் புறப்பட்டு முன் பின் அறியாத நாட்டிற்குச் செல்லல்
- வயது முதிர்ந்த மனைவியிடமிருந்து பெரிய சந்ததியை எதிர்பார்த்தல்
- தனது ஒரே பேறான மகன் ஈசாக்கைப் பலியிட முன் வந்தார்
- ஆபிரகாமின் மந்தை மேய்ப்போருக்கும், லோத்தின் மந்தை மேய்ப்போருக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டபோது நல்ல முறையில் தீர்த்து வைத்தல்
- சாராவை சகோதரி எனக் கூறுதல்
- இஸ்மவேல் தனது பிள்ளையாக இருந்தபோதும் சாராவின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களை வீட்டை விட்டு துரத்த வேண்டிய நிலை ஏற்பட்டமை

**இன்றைய கிறிஸ்தவர்களின் சவால்கள்**

- எவ்வித சந்தேகமும் இன்றி இறைவார்த்தையை ஏற்றுக்கொள்ளல்
- போர்கள், இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றால் நாடு, வீடு, நிலபுலம், உறவினர்கள் என்பவற்றை இழந்து கஸ்டப்படுபவர்கள் இறை விசுவாசத்தில் நம்பிக்கையோடு வாழுதல்
- இறைபணிக்காக தாய்நாடு உறவினர்கள், நிலபுலம் என்பவற்றைத் தியாகம் செய்ய ஆயத்தமாகுதல்
- எமக்கு ஏற்படும் எல்லா சவால்களுக்கும் தைரியமாக முகம் கொடுத்தல்
- பிரச்சனைகள் ஏற்படும் இடங்களில் சமாதானமுறையில் தீர்த்து வைத்தல்

(ii)
- சீனாய் உடன்படிக்கையின் குறிக்கோளானது மக்களை அரச, குருத்துவ, தூய மக்களினங்களாக மாற்றுவதேயாகும்
- இஸ்ராயேல் மக்களை கழுகுகளின் இறக்கைகள் மேல் என்னும் அடையாளத்தினால் இறைவனின் ஆழமான பாதுகாப்பை உணரச் செய்து இறைவனுக்கு சொந்தமான மக்களாக, இறைவனின் தனிச்சொத்து என அவர்களின் உள்ளங்களில் இறைவனின் செல்வாக்கு ஏற்படுத்தப்பட்டது
- இன்று திருமுழுக்கின் மூலம் அவரது பிள்ளைகளான நாமும் இறைவனின் ஆழமான பராமரிப்பைக் கண்டுணர்ந்த சந்தர்ப்பங்களில் அவர் நம் தேவன், நாம் அவரின் பிள்ளைகள் என்ற உணர்வோடு உள்ளத்தால் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்
- பணிக்குருத்துவத்திற்கோ, பொதுக்குருத்துவத்திற்கோ அழைக்கப்பட்ட நாம் அழைப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து பிறருக்கு இறைவன் முன்னிலையில் சாட்சியம் பகர வேண்டும்
- இந்த சாட்சிய வாழ்வினூடாக கடவுளுக்கும், மனிதருக்குமிடையில் நடுநிலையாளராக செயற்படுகின்ற திருநிலையினர், விசுவாசிகளை இறைபாதையில் இட்டுச் செல்லல் வேண்டும்
- தூய வாழ்க்கை வாழ்வதன் மூலம் இறைவனின் புனிதத்தன்மை, நன்மைத்தனம் என்பவற்றை பிரதிபலித்தல் வேண்டும்
- பத்துக்கட்டளைகளை கடைப்பிடிப்பதன் வழியாக எமக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவை கட்டியெழுப்பவும், நமக்கும் சமுதாயத்துக்குமிடையிலான உறவை கட்டியெழுப்பவும் வேண்டும்
- இன்றைய இளம்பராயத்தினர் கடவுள் பயமற்று, பெற்றோர் பெரியோரை மதியாது, ஞான அறிவிலும் ஆன்மீகத்திலும் பின்தங்கியவர்களாகவும், லௌகீக நாட்டமுள்ளோராகவும், ஆகாச படங்களுக்கும், மதுபோதைக்கும் அடிமைகளாக காணப்படுவோரை மனம் திருப்ப வேண்டும்
- எனவே பத்துக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கின்ற சமுதாயம் உருவாக நாம் இளம் சமுதாயத்தினரில் மனமாற்றமும் ஆன்மீக வழிகாட்டிகளின் வழிநடத்தலும் அவசியமாகும்

**5)** (i)
- இங்கு ஒரு சிலர் சில பகுதிகளை விடுத்தும் சிலவற்றை சேர்த்தும் எழுதியுள்ளனர்
- யேசுவின் குழந்தைப் பருவத்தை மத்தேயுவும் லூக்காவும் எழுத, மாற்கு அதை எழுதவில்லை
- யேசுவின் தலைமுறை அட்டவணையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
  மத் 1 : 1-17, லூக் 3 : 23 – 38
- அமைப்பிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
  மத்தேயு யேசுவின் உரையாடல்களை ஐந்து பாகங்களாக பிரிக்கின்றார். ஆனால் லூக்கா யேசுவின் பயணத்தின் போது நிகழ்வதாக அமைக்கின்றார்
- மத்தேயு நற்செய்தியில் மலைப்பொழிவு எட்டுப் பேறுகள் என்றும், லூக்கா நற்செய்தியில் சமவெளிப்பொழிவு என்றும் அழைக்கப்படுகின்றன

(ii)
- ஒத்தமை நற்செய்தி ஆசிரியர்கள் எடுத்துக்கொண்ட கருத்துக்கள் அவர்களின் அறிவுத்திறன், சூழ்நிலைகள் மட்டுமல்ல, அவர்கள் கையாண்ட மூலகங்களும் இவ் வேற்றுமைகளுக்கு காரணங்களாகும்
- இந்த ஒத்தமை நற்செய்தியாளர்கள் ஒவ்வொருவரும் நற்செய்தியை எழுதிய நோக்கங்கள் வேறுபட்டது

  மத்தேயு - பலஸ்தீன யூதர்களுக்கும், மாற்கு உரோமை கிறிஸ்தவர்களுக்கும், லூக்கா - அனைத்து இன மக்களுக்கும் எழுதியுள்ளன.
- வாய்மொழிப் பாரம்பரியக் கொள்கை – நற்செய்திகள் எழுத்து வடிவம் பெறு முன் திருத்தூதர்களின் போதனை ஒரே விதமாக போதிக்கப்பட்டன. ஆனால் திருச்சபை பரவியபோது இப் போதனைகள் போதிக்கப்பட்ட இடங்களுக்கு ஏற்ப சிறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டன
- மத்தேயு பலஸ்தீனாவில் வழக்கிலிருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தை எழுதினார்
- மாற்கு உரோமையில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை எழுதினார்
- லூக்கா - அந்தியோக்கியாவிலிருந்த பாரம்பரீயத்தை எழுதினார்
- தொடர்ந்து மாணவர்கள் இருமூலக்கொள்கை, நான்கு மூலக்கொள்கை பற்றி விளக்கி எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்

**6)** (i)
- போர்த்துக்கேயரைப் போன்று மத நிறுவனங்களில் கல்வியை முற்றுமுழுதாக விட்டு விடாது அரச கட்டுப்பாட்டின் கீழ் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்விமுறையை வழங்க முற்பட்டனர்
- குறைந்த செலவில் உயர் கல்வியை வழங்கக்கூடிய நுட்பமுறைகளையே கையாண்டனர்

  நான்கு விதமான பாடசாலைகள் நடைமுறையில் இருந்தன (கோவில் பற்று பாடசாலை, செமினரிகள், ஒல்லாந்த பாசாலைகள், அனாதை இல்லங்கள்)
- 8 – 15 வயதுள்ள பிள்ளைகள் எல்லோரும் பாடசாலை செல்ல வேண்டும் என வற்புறுத்தப்பட்டன
- இலங்கையில் அரச ஆணைக்குழுவொன்றை நியமித்து நிர்வகித்தல்

  இவ்வாறான காரணங்களைக் கூறி விளக்கியிருப்பின் புள்ளி வழங்கவும்

(ii)
- இவர் இங்கு வந்து பணியாற்றியது கிறிஸ்துவின் பிரதிநிதியாக மட்டுமே
- இரக்கப் பணிகளின் போது கிறிஸ்தவர்களை ஒரேவிதமாக கவனித்தார். தம் வாழ்வின் மூலம் கத்தோலிக்க மறைக்கு சான்றுபகர்ந்தார்
- தேசிய மொழிகளை நன்றாகக் கற்று மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டனர்
- தேசிய மயமாக்குதலில் கலாசாரத்தின் சிறந்த தன்மைக்கு வழிகாட்டியவர்
- தமது முன்மாதிரிகையாலும் ஒறத்தோரியன் சபைக் கருக்களின் பணியினாலும் மறைப் பிரசங்கத்துக்கு வழிகாட்டினார.

**7)** (i)
- ஆண்டவரின் நாள், நிகழும் யுகம், வரவிருக்கும் யுகம்
- அதுபொல்லா நாள், பயங்கரமான நாள், அந்த நாளில் இக்காலம் முற்றுப்பெற்று வரவிருக்கும் காலம் உதயமாகும். அந்நாளில் சாத்தான் தோற்கடிக்கப்படுவான்
- பூமி அதிர்ச்சிகள், பூகம்பங்கள் ஏற்படும். இவை போன்ற கருத்துக்கள் 5 விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்

(ii)
- கிறிஸ்து இவ்வுலகிற்கு மனிதவதாரமெடுத்த நோக்கத்தை தெளிவாக விளக்கியிருந்தால் புள்ளிகள் வழங்கவும்

**8)** (i)

- திருவழிபாடு இறைமனித உறவைக் காட்டுகிறது. மக்களை இறைவன் பாலும், இறைவனை மக்கள் பாலும் கொண்டு செல்வதே திருச்சபையின் பணி ஆகும். திருச்சபையிலுள்ள எல்லோரும் தாம் பெற்ற திருமுழுக்கினால் கிறிஸ்துவின் குருத்துவப் பணியில் செயற்பாட்டோடு பங்காளிகளாகலாம்
- இறைவனை மகிமைப்படுத்துவதும், மனிதனை புனிதப்படுத்துவதும் திருவழிபாட்டில் நிறைவேறுகின்றது
- திருச்சபையின் செயல்கள் அனைத்தும் நாடி நிற்கும் சிகரமாகவும், திருச்சபையின் ஆற்றல்கள் அனைத்தும் பெருக்கெடுக்கும் ஊற்றாகவும் திருவழிபாடு விளங்குகிறது
- திருவழிபாட்டுச் சடங்குகளுக்காக செயற்பாடுள்ள பங்களிப்பு முக்கிய இடத்தை வகித்தமையால் மக்களின் செயற்பாடுள்ள பங்களிப்பு அதிக வளர்ச்சியடைந்தது
- திருவழிபாட்டுச் சடங்குகளில் குறிக்கப்பட்ட பணிகளுக்காக அவ்வப் பகுதிகளுக்குரியதான பணிகளை அர்த்தமுள்ள முறையால் நிகழ்த்திட வழி சமைக்கின்றது
- திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் திருப்பலிப் பொருட்களும் உடைகளும் உள்நாட்டுப் பழக்கங்களுக்கும் பண்புகளுக்கும் ஏற்ப ஆக்கப்பட்டன
- இறைவார்த்தைக்கு முக்கிய இடம் கொடுத்தல், மற்றும் அதற்கு உயிரூட்டமுள்ள அன்பையும் மரியாதையும் அளித்தல்

(ii)

- மனிதன் இறைசாயலாகப் படைக்கப்பட்டதனால் எல்லாப் படைப்புக்களையும் விட மேலானவன்
- உடலும் ஆன்மாவும் உடையவன்
- மனிதன் ஒரு சமூகப்பிராணி
- ஞானம், அறவு, புத்தி, விருப்பு ஆகிய பண்புகளைக் கொண்டவன்
- மனிதனுடைய அறிவு ஞானத்தினால் நிறைவு பெறுகின்றது
- மனச்சான்றை மனிதன் கொண்டுள்ளதால் அவனுடைய மாண்பு மேன்மையுறுகிறது. இதனால் சரியானதை தெரியவும், தவறானதை அகற்றவும் கூடிய ஆற்றலை கொண்டவன்
- சுதந்திரம் உடையவன். இது இறைசாயலின் அடையாளமாயிருப்பதால் அவன் சுயாதீனமாக செயற்படக் கூடியவன்
- உடல் இறைவனால் படைக்கப்பட்டமையால் இறைவன் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்ய இருப்பதால் உடல் இறைவனின் ஆலயமாகியது